

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) நாமக்கல் மாவட்ட அரசு விழாவில் பங்கேற்க செல்லும் வழியில், பொது மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) நாமக்கல் மாவட்டம், சிலம்பகவுண்டர் பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவின்போது, கழகத்தின் மூத்த முன்னோடியும், முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அமைப்புக் குழு தலைவருமான நாமக்கல் மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன் அவர்களுக்கு ஒரு பவுன் மோதிரம் அணிவித்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) முகாம் அலுவலகத்தில், தாய்லாந்தின் சோங்க்லாவில் வருகிற 1.12.2024 முதல் 7.12.2024 வரை நடைபெறவுள்ள உலக திறன் இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ள தமிழ்நாட்டின் 7 தடகள பாரா ஒலிம்பிக் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு விமான கட்டணம், தங்கும் இடம் மற்றும் போட்டியின் நுழைவு கட்டணத்திற்கான செலவினத்திற்காக தலா 1,67,700 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அதிநவீன பந்தய சைக்கிள்கள், போட்டிகளில் கலந்து கொள்ளும்

# 13 விளையாட்டு வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக்.23-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை மூலமாக விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அதிநவீன பந்தய சைக்கிள்கள், போட்டிகளில் கலந்து கொள்ளும் செலவினத்திற்கான தொகை என 13 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 1,00,36,312 ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை உலகில் உள்ள முன்னணி நாடுகளுடன் போட்டியிடும் வகையில் அனைத்து துறைகளிலும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

விளையாட்டுத்துறை நாடுகளுக்கிடையே நட்புறவு உண்டாக்கும் மிகச்சிறந்த ஒரு துறையாக திகழ்கின்றது. உலகின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் எந்த நாட்டை சார்ந்தவராக இருந்தாலும் நாடுகள் கடந்து அனைவராலும் கொண்டாடப் பட்டு வருகின்றனர்.

அத்தகைய சிறப்புகள் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகளுக்கும் கிடைக்க வேண்டும், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அனைத்து விளையாட்டு போட்டிகளிலும் சிறந்த நிலையை அடைய பொருளாதாரம் ஒரு தடையாக இருக்க கூடாது என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை ஏற்படுத்தி, அதன் மூலமாக விலையுயர்ந்த விளையாட்டு உபரகணங்கள், வெளிநாடுகளில் நடைபெறும் உலக அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள செலவினத்தொகை மற்றும் பயிற்சி பெற ஊக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த 3 வருடங்களில் மட்டும், 3 ஆயிரத்து 350 விளையாட்டு வீரர்களுக்கு, 110 கோடி ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கி உற்சாகப்படுத்தியுள்ளார். முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கையால், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீதம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், முதல் கட்டமாக 100 விளையாட்டு வீரர்களுக்கு, அரசுப்பணி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் பயனடைய விரும்பும் வீரர்கள், https://tnchampions.sdat.in என்ற இணையதள முகவரியின் மூலம் விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உடனடியாக அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டு வருகின்றன. இந்த அறக்கட்டளை மூலமாக கடந்த 2 ஆண்டுகளில், 680 வீரர்களுக்கு 12 கோடி அளவில் நிதி உதவி மற்றும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தேவையான விலை உயர்ந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் பாரிஸில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டிக்கு தமிழ்நாட்டில் இருந்து 6 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் நான்கு வீரர்கள் பதக்கம் வென்று வந்தார்கள். அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மொத்தம் 5 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கினார்.

அந்த வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வருகிற 10.10.2024 முதல் 21.10.2024 வரை ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் போர்ச்சுகல் நாடுகளில் நடைபெறவுள்ள சர்வதேச அளவிலான சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொள்ள உள்ள செல்வி. அ. சர்வாணிகா அவர்களுக்கு விமான கட்டணம், தங்கும் இடம் செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத் தொகை ரூ.5,29,182/-க்கான காசோலையை வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் தடகள விளையாட்டு வீரர்கள் தாய்லாந்தின் சோங்க்லாவில் 1.12.2024 முதல் 7.12.2024 வரை நடைபெறவுள்ள உலக திறன் இளைஞர் விளையாட்டுப் போட்டியில் கலந்துக்கொள்ள உள்ள 7 தடகள பாரா விளையாட்டு வீரர்களுக்கு விமான கட்டணம், தங்கும் இடம் செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்காக ரூ.11,73,900/-க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டின் 5 சைக்கிள் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு "TN Champions Foundation" அறக்கட்டளை மூலமாக தலா 16,66,646 ரூபாய் வீதம் மொத்தம் ரூ.83,33,230/-மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிள்களை வழங்கினார்.

நேற்று (22.10.2024) மட்டும் 13 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 1,00,36,312 ரூபாய்க்கான விளையாட்டு மேம்பாட்டு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நேற்று (22.10.2024) தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் கடந்த 2024ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட, அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னொசென்ட் திவ்யா, சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உயர் கல்வித்துறை சார்பில் – சென்னையில்

# பல்வேறு கல்வி நிறுவனங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகள்!

## உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

## பணிகள் விரைந்தும், தரமாகவும் நிறைவேற்றப்பட அதிகாரிகளுக்கு அறிவுரை!

சென்னை, அக்.23

உயர்கல்வித் துறையின் சார்பில், சென்னையில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நேற்று நேரில் ஆய்வு செய்தார். கட்டுமானப் பணிகள் விரைந்தும், தரமாகவும் முடிக்கப்பட அதிகாரிகளுக்கு உததரவிட்டார்.

இது தொடர்பான பத்திரிக்கைச் செய்தி வருமாறு:-

கடந்த 2022-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மாநிலக் கல்லூரியில் மாற்றுத்திறனாளி ஆண்கள் விடுதியும், மாற்றுத்திறனாளி பெண்கள் விடுதியும் கட்டித் தரப் படும்" என்று வாக்களித்தார். அதன்படி அரசாணை வெளியிடப்பட்டு அந்தப் பணி இப்போது முடிவுற்று மாற்றுத்திறனாளி ஆண்கள் விடுதியையும், பெண்கள் விடுதியையும் முதலமைச்சர் அவர்கள் விரைவில் திறந்து வைக்க உள்ளார்.

இதனையொட்டி, நேற்று (22.10.2024) செவ்வாய்க்கிழமையன்று, உயர் கல்வித் துறை அமைச்சரும், உயர்கல்வித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர், மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர், தொழில்நுட்ப கல்வி ஆணையர், தொழில்நுட்ப கல்வி வட்ட தலைமைப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரும் மாநிலக் கல்லூரியில் கட்டி முடிக்கப் பட்டுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆண்கள் விடுதியை யும், பெண்கள் விடுதியை யும் பார்வையிட்டனர்.

அவ்விடுதியில் மாணாக்கர்களுக்காகச் செய்யப்பட்டுள்ள வசதிகளை மேற்பார்வையிட்டு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

ஆசியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில், ஒரு கல்லூரியின் வளாகத்திற்குள்ளேயே மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆண்கள் விடுதியையும் பெண்கள் விடுதியையும் நமது முதலமைச்சர் அவர்கள் கட்டித் தந்துள்ளது வரலாற்றுச் சாதனையாகும் என்று நமது உயர்கல்வித் துறை அமைச்சர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இவ்விடுதியில் 114 மாணவர்களும், 96 மாணவிகளும் என மொத்தம் 210 பேர் தங்க முடியும். மாணவர்களுக்கு 38 அறைகளும், மாணவிகளுக்கு 32 அறைகளும் என 64,500 ச.அடி பரப்பளவில் 21.60 கோடி மதிப்பீட்டில் இவ்விடுதிக் கட்டிடம் அமைந்துள்ளது. இவ்விடுதி பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு மிகப் பெரும் வசதியை அளிக்கக் கூடியதாக இருக்கும்.

இதனைத் தொடர்ந்து சென்னை, இராணி மேரி கல்லூரியில் கட்டி முடிக்கப் படும் தருவாயிலுள்ள தரை மற்றும் 6 தளங்கள் கொண்ட மகளிர் விடுதி கட்டிடத்தை அமைச்சர் அவர்களும் பிற அதிகாரிகளும் பார்வையிட்டனர். இந்த விடுதி 1,11,000 ச.அடி பரப்பளவில் 144 அறைகள், 452 மாணவியர் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

இதன் பின்னர், சென்னை தரமணி, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் அமைச்சர் ஆய்வு செய்தார். அப்போது மாணக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் வருகைப் பதிவு குறித்தும் ஆய்வு செய்தார். முறையாக வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

மாணாக்கர்களின் வேலைவாய்ப்பு விவரங்கள் மற்றும் தொழில் துறையுடன் மாணாக்கர்களின் பாடத்திட்டம் தொடர்பு உடையதாக உள்ளதா என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும் பள்ளிக் கல்வி அதிகாரிகளுடன் பலதொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்கள் கலந்தாலோசனை செய்து மாணாக்கர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதியை அமைச்சர் ஆய்வு செய்தார். இவ்விடுதி 52,670 ச.அடி பரப்பளவில் 95 அறைகள் கொண்டதாக அமைந்துள்ளது. இவ்விடுதி 18.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதியில் 285 மாணவியர் தங்கிக் கொள்ள முடியும். இவ்விடுதியையும் உயர்கல்வித்துறை அமைச்சர் முழுமையாக ஆய்வு செய்தார்.

சென்னை, தரமணியில் அமைந்துள்ள சி.ஐ.டி. வளாகத்தில் உள்ள 5 சிறப்பு நிறுவனங்களுக்கு (அச்சிடும் தொழில்நுட்ப நிறுவனம், டெக்ஸ்டைல் தொழில்நுட்ப நிறுவனம், இரசாயன தொழில்நுட்ப நிறுவனம், தோல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மாநில வணிகக் கல்வி நிறுவனம்) உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் பணிகளை உயர்கல்வித் துறை அமைச்சர் ஆய்வு செய்தார்.

இக்கல்வி நிறுவனங்களுக்கென 5 கட்டிடத் தொகுதிகள் 1,67,500 ச.அடி பரப்பளவில் 49.52 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கட்டிட தொகுதிகள் மாணாக்கர்களின் கல்வி நலனை மேலும் மேம்படுத்த உதவும்.

இவ்வாறு அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



சென்னை மாநிலக் கல்லூரியில், நேற்று (22.10.2024) கட்டி முடிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதியையும், இராணி மேரி கல்லூரியில் கட்டி முடிக்கும் தருவாயிலுள்ள தரை மற்றும் 6 தளங்கள் கொண்ட மகளிர் விடுதி கட்டடத்தையும், தரமணி, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதியையும் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பார்வையிட்டார். ஆய்வின்போது உயர் கல்வித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் டாக்டர் எம்.பி.விஜயகுமார், (ஓய்வு), தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் த.ஆபிரகாம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.